# ஆபிரகாமின் குமாரனான
# சகேயு !



உங்கள் வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவ செய்தி

**சாம்ஜெபத்துரை**

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# ஆபிரகாமின் குமாரனான "சகேயு"
(ZACCHAEUS - THE SON OF ABRAHAM)

**A. Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,**
**Municipal Women Children**
**Hospital Quarters**
**Tirunelveli - 627 006.**
**Tamil Nadu**

**J. சாம் ஜெபத்துரை**

வெளியிடுபவர்
**J. சாம் ஜெபத்துரை**
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024

முதற்பதிப்பு : ஜூலை 1992
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 103

(இது சகோதரன் சாம் ஜெபத்துரை அவர்கள் பிரசங்கித்த
தேவ செய்தியாகும்)

இந்த புத்தகத்தை வெளியிட உதவி செய்தவர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்.

Mr. Gonis Peter Bassian,
Berlin, W-Germany

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அச்சிட்டோர்:
ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

# ஆபிரகாமின் குமாரனான "சகேயு!"

"இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதைக் கண்ட யாவரும் இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள். சகேயு நின்று கர்த்தரை நோக்கி ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்; ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்" (லூக் 19:5-9).

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் யாவரையும் அன்போடுகூட வாழ்த்துகிறேன். இந்த நாளின் செய்தி உங்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாய் அமைவதாக!

இன்றைக்கு நீங்கள் விசேஷித்த விதமாய் ஆசீர்வதிக்கப்பட போகிறீர்கள். காரணம் ஆண்டவர் ஒரு விசேஷ அழைப்பை உங்களுக்குக் கொடுக்கும்படி பிரியப்படுகிறார். இந்த அழைப்பு கிருபையின் அழைப்பு. இந்த அழைப்பு தனிப்பட்ட அழைப்பு. இந்த அழைப்பு அவசரமான அழைப்பு. இந்த அழைப்பு நித்தியமான அழைப்பு.

கர்த்தர் ஒரு பெரிய அழைப்பை நமக்குக் கொடுப்பதற்காகத்தான் பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்தார். அவரே அந்த அழைப்பை பரலோக தேவனிடத்திலிருந்து நமக்கு சுமந்து கொண்டு வந்தார். இந்த மாலை வேளையிலே வேதத்திலிருந்து கர்த்தர் எவ்விதமாய் சகே

யுவை அழைத்தார் என்று நாம் தியானிக்கிற அதே வேளை யிலே சகேயுவுக்குக் கொடுத்த அந்த அழைப்பை நாமும் ஏற்றுக்கொள்ளப் போகிறோம்!

சகேயுவைக் குறித்து நாம் எல்லாருமே அறிந்திருப் போம். ஒரு முறை இயேசு எரிகோ என்ற பட்டணத்தில் பிரவேசித்து அதன் வழியாக நடந்து போகையில் ஆயக் காரனுக்கு தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன் இயேசுவைப் பார்க்க விரும் பினன். அவர் எப்படிப்பட்டவர் என்று எண்ணி அவரை கண்குளிர காணும்படி விரும்பினன்.

ஆனல் அவன் குள்ளனயிருந்தபடியினல் ஜனக்கூட் டத்தின் மத்தியிலே தலையை உயர்த்தி அவரை பார்க்க முடியவில்லை. எனவே இயேசு நடந்துபோகிற வழியிலே அவருக்கு முன்பாக ஓடி அவரைக் காணும்படி ஒரு காட் டத்தி மரத்தில் ஏறினன்.

இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது அண்ணாந்துப் பார்த்து அவனைக் கண்டு, ''சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா; இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண் டும்'' என்றார்.

அதைக்கேட்டதும் சகேயுவுக்கு இருந்த சந்தோஷம் அளவிடப்பட முடியாது. அவன் மரத்திலிருந்து வேக மாய் இறங்கி வந்தான். அவரை அழைத்துக்கொண்டு தன்னுடைய வீட்டிற்கு போனன்.

இயேசு அவனுடைய வீட்டிற்கு போனதைப் பார்த்த தும் பலருக்கு பொருமையாய் இருந்தது. பலர் முறுமுறுத் தார்கள். இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனரே என்று குற்றம் சாட்டினர்கள்.

ஆனல் இயேசு தன்னுடைய வீட்டிற்கு வந்தது சகேயு வின் வாழ்க்கையிலே மறக்க முடியாத ஒரு அனுபவமாய்

இருந்தது. அவன் கர்த்தரை நோக்கி ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் நான் ஒருவனிடத்தில் எதாகிலும் அநியாயமாய் வாங்கின துண்டானால், நாலத்தனையாகத் திருப்ப செலுத்துகிறேன் என்றான்.

இயேசுகிறிஸ்து மகிழ்ச்சியடைந்தார் இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்.

## ஆபிரகாமின் குமாரன்!

"இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே" என்று இயேசு சொன்ன அந்த பகுதியை வாசித்து சிந்தித்துப் பாருங்கள். சகேயுவை அன்போடுகூட கர்த்தர் அரவணைத்து எல்லோருக்கும் முன்பாக சொல்லுகிறார், "இவனும் ஆபிரகாமின் குமாரன்" இன்று இவன் ஆபிரகாமின் குடும்பத்திற்குள் வந்து விட்டான். கர்த்தரின் குடும்பத்திற்குள் வந்து விட்டான். பரலோக குடும்பத்திற்குள் வந்துவிட்டான். இயேசு அகமகிழ்கிறார்.

இவனும் ஆபிரகாமின் குமாரனாயிருக்கிறானே என்று சொல்லுகிறவர் யார் தெரியுமா? ஆம் அவரும், ஆபிரகாமின் குமாரன்தான்.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தை வாசித்துப் பாருங்கள். ஆம் அதுதான் புதிய ஏற்பாட்டின் ஆரம்ப வசனம். அந்த வசனம் இயேசுவை அறிமுகப்படுத்தி சொல்லும் போது, "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" என்று சொல்லி ஆரம்பிக்கிறது.

ஆம் வானத்திலிருந்து இறங்கி வந்த ஆபிரகாமின் குமாரன் பூமியிலே தன்னண்டை இழுத்துக்கொண்ட சகேயுவை அன்போடு சுட்டி காண்பித்து நீயும் ஆபிரகாமின் குமாரன் என்று அழைக்கிறார்.

பாருங்கள் சகேயுவும், இயேசுகிறிஸ்துவும் ஒரே நிமிடத்தில் சகோதரர்களாகி விட்டார்கள். இந்த சகோதரத்துவம் நித்தியமான சகோதரத்துவம். இவனும் என்னோடு கூட ஆபிரகாமுடைய குமாரனாயிருக்கிறானே!

ஒரு நாள் நாம் பரலோக ராஜ்யத்திற்குள் செல்லும் போது பரலோகம் ஆபிரகாமின் குமாரர்களும் குமாரத்திகளும் நிரம்பி இருக்கிறதைக் காண்போம். கிழக்கிலும், மேற்கிலும், தெற்கிலும், வடக்கிலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தி இருப்பதையும் காண்போம் ஆ அந்த நாள் எத்தனை இனிமையான நாளாய் இருக்கும்.

பழைய ஏற்பாட்டிலே நாம் ஆபிரகாமினுடைய வாழ்க்கையை திருப்பிப் பார்த்தால் ஆபிரகாம் பல ஆண்டு காலங்கள் பிள்ளையில்லாமல் இருந்ததை நாம் அறிந்து கொள்ளலாம். தனக்கு ஒரு குமாரன் இல்லையே என்று ஆபிரகாம் ஏங்கினார். தேவரீர் அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக் கர்த்தனாய் இருக்கிறானே என்றார் கலக்கத்துடன்

(ஆதி 15:2).

தனக்கு ஒரு பிள்ளை இல்லை, குமாரன் இல்லை என்று ஏங்கிய ஆபிரகாமை கர்த்தர் மூன்று விதங்களில் ஆசிர்வதிக்க சித்தமானார். மூன்று விதங்களில் ஆபிரகாமுக்கு சந்ததியை ஏற்படுத்த கர்த்தர் சித்தமானார். 1. உன் சந்ததி பூமியின் தூளைப்போல இருக்கும். 2. கடற்கரை மணலைப்போல பெருகும். 3. வானத்து நட்சத்திரங்களைப் போல உன் சந்ததி விளங்கும்.

கவனித்துப் பாருங்கள். ஆபிரகாமின் சந்ததியை மூன்று காரியங்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது 1. பூமியின் தூள். 2. கடற்கரை மணல். 3. வானத்தின் நட்சத்திரங்கள்.

அப்படியே ஆபிரகாமுக்கு மூன்று மனைவிமார்கள் இருந்தார்கள். மூன்று மனைவியின் மூலமாய் மூன்று வித்தியாசப்பட்ட சந்ததி எழும்பியது. கேத்தூராள் என்ற மனைவியின் மூலமாய் பிறந்த சந்ததி பூமியின் தூளைப்போல விளங்கியது. ஆகாரின் சந்ததி கடற்கரை மணலைப்போல படர்ந்தது. ஆனால் கர்த்தர் சாராளின் மூலமாக ஒரு ஆவிக்குரிய சந்ததியை உன்னதத்திற்குரிய சந்ததியை எழுப்பும்படி சித்தமானார். அது உன்னதங் களிலே நட்சத்திரங்களைப் போல பிரகாசமான ஒரு சந்ததி யாகும்.

ஒரு நாள் கர்த்தர் ஆபிரகாமை வெளியே அழைத்துக் கொண்டு வந்து நீ வானத்தை அண்ணாந்துப் பார்; நட்சத் திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார் (ஆதி 15:5).

ஆபிரகாம் ஆவலோடு வானத்தை அண்ணாந்து நோக்கிப் பார்த்தார். கர்த்தர் சொன்ன வாக்குத்தத் தத்தை நினைவுகூர்ந்து வானம் எங்கும் அழகாய் பிரகா சிக்கிற நட்சத்திரங்களை எல்லாம் அவன் கண்டான்.

அவன் விசுவாசத்தோடு பார்த்ததினால் நட்சத்திரங் களாய் காணவில்லை. நட்சத்திரங்களை தன்னுடைய பிள்ளைகளாகவே அவன் கண்டான். வானம் எங்கும் ஆபிரகாமுடைய பிள்ளைகள். வானத்திலிருந்து ஆபிரகாமை நோக்கிப் பார்த்து ஒவ்வொன்றும் ஆபிரகாமை அப்பா! அப்பா! என்று அழைத்து இருந் திருக்கும்.

அந்த நட்சத்திரங்கள் அனைத்தும் அழகிய முகம் உடைய குழந்தைகளின் சாயலாய் விளங்கி இருந்திருக் கும். பல மொழிகள் பேசும் குழந்தைகள். பல ஜாதிகளில் இருந்து தோன்றிய குழந்தைகள். பல தேசத்திலிருந்து புறப்படுகிற குழந்தைகள். ஆபிரகாமின் குமாரர்.

குமாரத்தி என்று அழைக்கப்படப் போகிறவர்களை நட்சத்திரங்களாக ஆபிரகாம் பார்த்தபோது எவ்வளவாய் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

## விடிவெள்ளி நட்சத்திரம்!

அந்த நட்சத்திரங்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு நட்சத்திரம் ஆபிரகாமின் கண்களை மிகவும் கவர்ந்தது. அது பிரகாசமான நட்சத்திரம். விடிவெள்ளி நட்சத்திரம். அந்த நட்சத்திரத்தை ஆபிரகாம் பார்த்தபோது அந்த நட்சத்திரம் ஒரு அழகிய முகமாய் மாறியது. ஆயிரப்பேர் பதினாயிரம் பேரிலும் சிறந்த அழகு அந்த அழகு முற்றிலும் அழகுள்ளதாய் முற்றிலும் பூரணமுள்ளதாய் ஆபிரகாம் கண்டார்.

ஆபிரகாம் அந்த நட்சத்திரத்தைக் கண்டது மாத்திரமல்ல, அந்த நட்சத்திரம் ஆபிரகாமை பார்த்தது. ஆபிரகாம் அந்த நட்சத்திரத்தைப் பார்த்தார். அந்த நட்சத்திரமானவரும் ஆபிரகாமைப் பார்த்தார். இரண்டு பேரும் மாறி மாறி பார்த்துக் கொண்டார்கள்.

இயேசு அதைக் குறித்து பூமிக்கு வந்தபோது உங்கள் தகப்பனாகிய ஆபிரகாம் என் நாளைக் காண வாஞ்சையாயிருந்தார், கண்டு களிகூர்ந்தார் என்று கூறினார்.

ஆபிரகாம் அன்று கண்ட நட்சத்திரம்தான் பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமும், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னும் நட்சத்திரம். அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கொண்டுவந்து சேர்க்கிற நட்சத்திரம். பாதை தெரியாதவர்களை நித்திய பாதையில் அருமையாய் நடத்துகிற வழிகாட்டும் நட்சத்திரம்.

பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரத்தைச் சூழவும் அமர்ந்திருக்கிற அழகான மக்களையுடைய ஆவிக்குரிய சந்ததியை அன்று ஆபிரகாம் கண்டார். உன்னதங்களிலே தன்னோடுகூட உட்கார செய்து உன்னதத்திற்குரிய சகல

ஆசீர்வாதங்களையும் கொடுக்கிற இயேசுகிறிஸ்துவின் சந்ததியை ஆபிரகாமினுடைய கண்கள் அன்று கண்டது.

## புதிய ஏற்பாட்டில் புதிய சந்ததி!

பழைய ஏற்பாட்டிலே ஆபிரகாமின் சந்ததியை மூன்று காரியங்களுக்கு கர்த்தர் ஒப்பிட்டிருந்தார் என்று சொன்னேன். அது பூமியின் தூள், கடற்கரை மணல், வானத்து நட்சத்திரம். ஆனால் புதிய ஏற்பாட்டிற்கு வரும் போது ஆபிரகாமின் சந்ததியை வேதம் நான்காவது ஒரு காரியத்திற்கு ஒப்பிட்டு சொல்லுகிறது.

மத்தேயு 3-ம் அதிகாரம் 9-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். அங்கே யோவான் ஸ்நானகன் சொல்லுகிறார்: "தேவன் இந்த கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

கவனித்தீர்களா? கல்லுகளிலிருந்து ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டுப் பண்ண வல்லமையுள்ளவர். சகேயு எப்படிப்பட்ட ஒரு மனுஷனாயிருந்தான்? ஒரு கல் போல் இருந்தான். கல்லைப் போன்ற கடின இருதயம் ஈவு இரக்கமில்லாமல் வரி வசூலித்ததினால் அன்று ஜனங்கள் எல்லாரும் அவனை "கல்நெஞ்சன்" என்று அழைத்திருக்கக்கூடும். யார் அசைத்தாலும் அசையாத கல்லாய் விளங்கியிருந்திருப்பான்! ஆனால் கர்த்தரைப் பாருங்கள். அந்த கல்லை சுவிசேஷத்தினால் அசைத்து ஆபிரகாமின் பிள்ளையாக்கி உன்னதங்களிலே பிரகாசிக்கக்கூடிய சுடர்தரும் கல்லாய் மாற்ற வல்லமையுள்ளவராயிருந்தார். எத்தனை ஆச்சரியம்!

பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு ஆசிரியராய் பள்ளிக்கூடத்திலே பணியாற்றச் சேர்ந்தபோது அந்த தலைமை ஆசிரியர் என்னைப் பார்த்து, "சகோதரனே நாற்பது கூழாங்கற்களை நான் உன்னுடைய கைகளிலே

கொடுக்கிறேன். உன் கைகளிலே பயிலப்போகும் மாணவர்கள் வெறும் கூழாங்கற்கள்தான். ஆனால் அவர்களுக்கு எப்படி படித்துக் கொடுப்பாய் என்று தெரியாது. நீ எனக்கு மாணிக்க கற்களாய் மாற்றிக் கொடுக்க வேண்டும்'' என்றார். கூழாங்கற்களை மாணிக்க கற்களாய் மாற்றும் திறமை உடையவர்கள் ஆசிரியர்கள் என்று அந்த தலைமை ஆசிரியர் விசுவாசம் கொண்டிருந்தார்.

அப்படியானால் கர்த்தர் சாதாரண கற்களை எப்படி மாற்றக்கூடியவர்? ஆம், வானத்து நட்சத்திரங்களாய் மாற்றக் கூடியவர். பிரகாசமாய் மாற்றக்கூடியவர். கல் நெஞ்சர்களை பக்தர்களாய் மாற்றக்கூடியவர். கொடூரமான உள்ளம் படைத்தவர்களை மென்மையான மிஷனரியாய் மாற்றக்கூடியவர். உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி!

அல்லேலூயா!

சகேயு ஒரு கல் என்றால் கிறிஸ்துவும் கூட ஒரு கல் தான். ஆனால் இந்த இரண்டு கற்களுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

இயேசு எப்படிப்பட்ட கல்? ஆம் வீடு கட்டுகிறவர்கள் ஆகாது என்று சொன்ன தலைக்கல்லே இயேசுகிறிஸ்துவாகிய கல். அஸ்திபாரமாய் வைக்கப்பட்ட கல். அது பரீட்சிக்கப்பட்ட கல். விலையேறப்பெற்ற கல். சீயோனிலே வைக்கப்பட்ட கல். திட அஸ்திபாரமான மூலைக்கல்

(ஏசா 28:16).

மூலைக்கல்லான கிறிஸ்து நம்மை அவரோடுகூட சேர்த்து கட்டும்படியான கற்களாய் மாற்றுகிறார். இயேசு கிறிஸ்து மூலைக்கல் என்றால் நாம் அவர்மேல் நித்தியமாய் கட்டப்படுகிற ஜீவனுள்ள கற்களாய் இருக்கிறோம்!

எபேசியர் 2-ம் அதிகாரம் 20-ம் வசனத்திலிருந்து வாசித்துப் பாருங்கள். ''இயேசுகிறிஸ்துதாமே மூலைக்

கல்லாய் இருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.''

அருமையான தேவனுடைய பிள்ளைகளே அன்றைக்கு சகேயுவுக்கு அழைப்புக் கொடுத்தவர் இன்றைக்கு உங்களுக்கும் அழைப்புக் கொடுக்கிறார். நீங்கள் எப்படிப் பட்டவர்களாய் இருந்தாலும் உங்களை மாற்றுகிற தெய்வீக வல்லமை அவருக்கு உண்டு. அவரால் சந்திக்க முடியாத கடின இருதயம் உடையவர் ஒருவரும் இல்லை. அவரால் உடைக்க முடியாத கற்பாறை ஒன்றும் இல்லை. அவர் கற்பாறையை மெழுகைப்போல உருகச் செய்கிறார். கருங்கற்களை ஆட்டுக்குட்டியைப் போல துள்ளப் பண்ணுகிறார்.

இன்று உங்களுடைய வாழ்க்கை மாறப்போகிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படப் போகிறீர்கள். உன்னதமான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளப்போகிறீர்கள். நித்தியமான மேன்மைகளை சுதந்தரித்துக்கொள்ளப் போகிறீர்கள். இந்த இரவு உங்கள் வாழ்க்கை முற்றிலும் மாறுகிற ஒரு இரவு. ஆபிரகாமின் குமாரர், குமாரத்திகளாய் நீங்கள் மாறும்படி இயேசுகிறிஸ்து உங்களை அன்போடுகூட அழைக்கிறார். கல்லுகளிலிருந்து ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டு பண்ண நம் அருமை ஆண்டவர் வல்லமையுள்ளவர்.

இந்த செய்தியை பேசிக்கொண்டிருக்கும்போதே என்னுடைய உள்ளம் பொங்குகிறது. வானம் திறக்கப்படுகிறதை உணருகிறேன். ஆபிரகாமின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து இன்று அநேகம்பேரை உன்னதத்திற்குரிய அழைப்பினால் அழைக்கிறதைக் காண்கிறேன். இன்று உங்கள் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகி இருக்கும். ஆமென்! அல்லேலூயா!

என் வாழ்க்கையை திரும்பிப் பார்க்க விரும்புகிறேன். 1973-ம் ஆண்டுதான் நான் கர்த்தருடைய பிள்ளையாக ஆபிரகாமின் குடும்பத்திற்குள், கர்த்தரின் கிருபைக்குள் கடந்து வந்தேன்.

அதற்கு முன்பு உலகப்பிரகாரமான வாழ்க்கைதான் வாழ்ந்து கொண்டிருந்தேன். பாவ உல்லாசங்களை நோக்கி என்னை வழி நடத்த ஏராளமான நண்பர்கள் எனக்கு இருந்தார்கள். அவர்களோடு சேர்ந்து குடித்தேன், சூதாடினேன். உலக உல்லாசங்களை அனுபவிக்க எண்ணினேன்.

கல்போன்ற உள்ளம்தான் அப்போது எனக்கு இருந்தது. கல்லைப் போல அறிவு இல்லாதவனாய், ஞானம் இல்லாதவனாய் நித்தியத்தைக் குறித்த எதிர்பார்ப்பு இல்லாதவனாய் வாழ்ந்து வந்தேன். எவ்வளவுக்கெவ்வளவு பாவ வாழ்க்கைக்குள் சென்றேனோ அவ்வளவுக்கவ்வளவு நிம்மதியையும், சமாதானத்தையும் இழந்தேன்.

பல தோல்விகள் ஒன்றன் பின் ஒன்றாக என்னைச் சூழந்து கொண்டது. இரவும் பகலும் அந்த தோல்வியின் உணர்ச்சி என்னை வாட்டி வதக்கியது. என் உள்ளத்தில் சோக உணர்வுகள் என்னை தூங்கவிடாமல் தடுத்து வேதனைப்படுத்தின.

நான் வருமானவரி இலாகாவிலே பணியாற்றிக் கொண்டிருந்தபோதிலும் அந்த பதவியும் செல்வமும் எனக்கு நிம்மதியைத் தரவில்லை. என் நண்பர்கள் எனக்கு நிம்மதியைத் தரவில்லை. நான் கை நிறைய சம்பாதித்த சம்பாதியம் எல்லாம் மன அமைதியையும் நிம்மதியையும் தரவில்லை. அவை எல்லாம் வெறும் குப்பை என்றும், சமாதானத்தை தராது என்பதையும் அப்போது நான் திட்டமாய் அறிந்துகொண்டேன்.

நிம்மதி இல்லாததினால், தூக்கத்தையும், சமாதானத்தையும் விரும்பி தூக்க மாத்திரைகளை விழுங்க ஆரம்பித்

தேன். தூக்க மாத்திரையினுல் கை கால்கள் தளர்ந்து போன நிலைமை ஏற்பட்டதே ஒழிய மனதில் அமைதி கிடைக்கவே இல்லை.

அப்படிப்பட்ட ஒரு வேளையிலே எதிர்பாராதவிதமாக என் அறை கதவு தட்டப்படுகிற சத்தத்தைக் கேட்டேன். கதவை திறந்தபோது ஒரு வயதான பெண்மணி அங்கே நின்று கொண்டிருந்தார்கள். ''நீங்கள்தானே சாம் ஜெபத்துரை?'' என்று கேட்டார்கள்.

மட்டுமல்லாமல் என்னைப் பார்த்து, ''தம்பி, ஏன் உன் முகம் பேய் அறைந்ததைப்போல இருக்கிறது? ஏன் துக்கமுடையவனுய் இருக்கிருய்? நான் உன்னேடுகூட பேச விரும்புகிறேன்'' என்று சொல்லி என் அறைக்குள் வந்தார்கள்.

அவர்களுடைய வார்த்தை என்னை மிகவும் தேற்றியது. ''கவலைகளும், கண்ணீரும் நிறைந்த இந்த உலகத்திலே ஆறுதல் தருகிறவர் ஒருவர் உண்டு. துயரமும், துன்பமும் சூழ்ந்த இந்த உலகத்தில் உனக்கு புதிய வாழ்க்கைத் தர வல்லமையுள்ளவர் ஒருவர் உண்டு. உலகத்தின் பாவ பழக்கவழக்கங்களில் இருந்து உன்னை விலக்கி காக்கக் கூடியவர் ஒருவர் உண்டு. அவர்தான் இயேசு கிறிஸ்து. இயேசுகிறிஸ்துவிடம் உன் வாழ்க்கையை அர்ப்பணித்து விடு. அவரே உனக்கு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தருவார்'' என்று சொல்லி எனக்காக ஜெபிக்கும்படி முழங்கால்படியிட்டார்கள்.

அவர்கள் வயதான பெண்மணிதான். ஆனுல் அவர்கள் ஜெபத்திற்கு பின்பாக பரிசுத்தமுள்ள தேவன் நின்று கொண்டிருக்கிறதை உணர முடிந்தது. எனக்காக சிலுவையில் அறையுண்ட தேவகுமாரன் என்னை ஆபிரகாமின் பிள்ளையாக ஏற்றுக்கொள்ள ஆவலுள்ளவராய் நின்று கொண்டிருக்கிறதை அறிய முடிந்தது.

கிறிஸ்துவைச் சந்திக்கக் கூடாதபடி என் பாவம் தடுத்தது. அப்பொழுது என்னை அறியாமல், ''ஐயோ, நான் ஒரு பாவி; இயேசுவே என்னை மன்னிக்க மாட்டீரா? என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ள மாட்டீரா? எனக்கு ஒரு புதிய வாழ்க்கையைத்தர மாட்டீரா?'' என்று கதற ஆரம்பித்தேன்.

இயேசுகிறிஸ்து அன்றைக்கே என்னைச் சந்திக்க சித்தமானார். நான் என்னுடைய பாவங்களை எல்லாம் அறிக்கைச் செய்தபோது தம்முடைய இரத்தத்தினாலே என்னைக் கழுவி சுத்திகரித்து தம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொண்டார். இன்று அவருடைய பிள்ளை என்று நான் அழைக்கப்படுகிற பாக்கியத்தை உணரும்போது என் உள்ளம் எல்லாம் மகிழ்ந்து களிகூருகிறது.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிற சகோதரனே, சகோதரியே, நீங்களும் கிறிஸ்துவண்டை வாருங்கள் என்று அன்புடன் அழைக்கிறேன். பாக்கியமான வாழ்க்கைக்கு வாருங்கள். பாவங்களையும், சாபங்களையும் களைந்துபோட வாருங்கள். நீங்கள் ஆபிரகாமின் குமாரர்களாய், குமாரத்திகளாய் மாறுவீர்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளையே, இன்றைக்கு வேதத்தில் இருந்து சகேயுவுக்கு எப்படி அந்த அழைப்பு வந்தது. அந்த அழைப்பு எப்படிப்பட்ட அழைப்பு, அந்த அழைப்பின் மேன்மை என்ன என்பதைக் குறித்து ஐந்து அல்லது ஆறு கருத்துக்களை உங்கள் மத்தியிலே பகிர்ந்து கொள்ள பிரியப்படுகிறேன். நீங்கள் இந்த அழைப்புக்கு செவி சாய்ப்பீர்கள் என்றால் சகேயுவுக்குக் கிடைத்த எல்லா தெய்வீக ஆசீர்வாதமும் உங்களுக்கு கிடைக்கும் என்றும், நீங்கள் ஆபிரகாமின் குமாரர், குமாரத்திகளாய் மாறுவீர்கள் என்றும் உறுதி கூறுகிறேன்.

## 1. கிருபையின் அழைப்பு:-

கர்த்தர் சகேயுவை அழைத்தபோது அது ஒரு கிருபையின் அழைப்பாய் இருந்தது. சகேயுவே நீ இறங்கி வா

நான் உன் வீட்டில் தங்கவேண்டுமென்று சொல்லி அவர் அழைத்தார்.

இந்த அழைப்பின் சத்தம் சகேயுவின் காதுகளில் தொனித்தபோது சகேயுவுக்கு தன் காதுகளை நம்பக் கூடாததாய் இருந்திருக்கும் "இத்தனை திரள் கூட்டத் திலே எனக்கா இந்த அழைப்பு வருகிறது? என் வீட்டிலா அவர் தங்க போகிறார்? எனக்கா இத்தனை கிருபை? எவ்வளவு திரள் கூட்ட ஜனங்கள் இயேசுவைத் தொடர்ந்து வருகிறார்கள்! அவர்களுக்கு இந்த அழைப்பு கிடைக்காமல் பாவியாகிய எனக்கல்லவா இந்த அழைப்பு கிடைக்கிறது? என் தேவன் என்மேல் பாராட்டுகிற அன்பு எவ்வளவு பெரியது! இந்த கிருபை எவ்வளவு பெரியது!" என்று சொல்லி அவனுடைய உள்ளம் பூரித்திருக்கக் கூடும்.

சகேயு அன்றைக்கு இருந்த ரோமசாம்ராஜ்யத்தில் வருமான வரி இலாகாவில் பணியாற்றியவர். ஆயக்காரனுக்கு தலைவன் என்று சொல்லும்போது பெரிய அதிகாரியாய் விளங்கியிருக்க வேண்டும் என்றும் நாம் அறியலாம். உலகப்பிரகாரமான சகேயு ஒரு பெரிய ஐசுவரியவானாய் இருந்த போதிலும் யூதருக்கு முன்பாக அருவருக்கப் படத் தக்கவனாக, கேவலமுள்ளவனாக எண்ணப்பட்டான்.

மாத்திரமல்ல, அவனுடைய சரீர வளர்ச்சியிலும் ஒரு குறைபாடு இருந்தது. அவன் ஒரு குள்ளனாயிருந்தான். அவன் குள்ளனாய் இருந்தது மற்றவர்களுக்கு முன்பாக பரியாசம் பண்ணக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிட்டது. மற்றவர்கள் அவனை வெறுத்து ஒதுக்கியபோது கிறிஸ்துவின் கிருபை அவனை அழைத்தது. "சகேயுவே நீ இறங்கி வா நான் உன் வீட்டில் தங்க வேண்டும்" என்று கர்த்தர் கிருபையின் வார்த்தைகளை பொழிந்தருளினார்.

"சகேயுவே, நான் உன் வீட்டிற்கு வர பிரியப்படுகிறேன். நீ ஆபிரகாமின் குமாரனாய் மாறப்போகிறாய். உன்

வீட்டிற்கு இரட்சிப்பு வரப்போகிறது. தேவ வெளிச்சம் உன் குடும்பத்தில் வீசப்போகிறது.''

இயேசு சகேயுவை அழைப்பதற்கு முன்பு அவனுக்கு எல்லாமே எதிராக இருந்தது. அவனுடைய ஊர், அவனுடைய தொழில், அவனுடைய உருவம், அவனுடைய குணதிசயங்கள் எல்லாமே அவனுக்கு விரோதமாய் இருப்பதைப் போலத்தான் விளங்கியது.

அவன் எரிகோ ஊரைச் சேர்ந்தவன். எரிகோ என்றாலே சபிக்கப்பட்ட ஊர் என்றுதான் அர்த்தம். யோசுவா எரிகோ கோட்டையைத் தகர்த்தபோது எரிகோவைச் சபித்தார். எரிகோவின் மேல் சாபம் இருந்தது.

இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டுமென்று இயேசு சொன்னபோது சபிக்கப்பட்ட எரிகோவுக்கு அவர் வருகிறாரா! சபிக்கப்பட்ட இந்த ஊரிலுள்ள என்னுடைய வீட்டில் வந்து தங்க போகிறாரா! எரிகோ என்ற ஊருக்கு இப்படிப்பட்ட ஒரு கிருபை கிடைத்ததா என்று சகேயு ஆனந்தப் பரவசம் அடைந்திருப்பார்.

இயேசுவின் வருகை சகேயுவை மாத்திரமல்ல, அந்த முழு ஊருக்குமே பெரிய ஆனந்தம் கிடைக்கக்கூடியதாய் இருந்தது. இயேசு வரும்போது இனி அது சாபமாய் இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

சகேயுவினுடைய குடும்பம் யூதர்களினால் வெறுத்து ஒதுக்கப்பட்ட குடும்பமாய் இருந்திருக்கக்கூடும். ரோம அரசாங்கத்தின் கைக்கூலி என்று யூதர்கள் பரியாசம் செய்திருக்கக்கூடும். அவனை ஆயக்காரன் என்றார்கள், பாவி என்றார்கள். சகேயுவைக் குறித்து எல்லாருமே முறுமுறுத்தார்கள். அந்த சூழ்நிலையிலும் அந்த கிருபையின் அழைப்பு சகேயுவுக்கு கிடைத்தது.

தேவபிள்ளையே, அந்த கிருபையின் அழைப்பு இன்றைக்கு உன்னை நோக்கி வருகிறது. எண்பது கோடி மக்கள் உள்ள தேசத்திலே கர்த்தர் கிருபையாய் உன்னைக்

இரட்சிக்குப்படி செய்தபானுர். இது எத்தனை கிருபை! கர்த்தரை ''அப்பா, பிதாவே'' என்று அழைக்கக்கூடிய புத்திரசுவிகார பாக்கியம் கிடைத்தது எத்தனை பெரிய கிருபை! தெய்வீக சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வது எத்தனை பெரிய கிருபை!

''கிருபையினுலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு'' என்று அப்.பவுல் எழுதுகிருர். இரட்சிக்கப்படுவதே தேவனுடைய கிருபைதான்.

ஒரு நாள் நாம் பரலோக ராஜ்யத்திற்குள் செல்லுவோம். அப்பொழுது அந்த ஒளிமயமான தேசத்தில் ஆயிரம் பதினுயிரமான தேவதூதர்களைக் காண்போம். பரிசுத்தவான்களை எல்லாம் காண்போம். எப்படி நீங்கள் பரலோகத்திற்கு வந்தீர்கள் என்று ஒருவரை ஒருவர் விசாரிக்கும்போது நாம் என்ன சொல்லுவோம்? இது கிருபை. தேவனுடைய கிருபை என்று சொல்லுவோம்.

ஆம், தேவனுடைய கிருபைதான் நம்மை சந்தித்தது. அவருடைய கிருபைதான் நம்மை வழிநடத்துகிறது. அவருடைய கிருபைதான் நம்மை பாதுகாக்கிறது. அவருடைய கிருபைதான் நித்தியமாக நம்மை நிலைநிறுத்தியது. தேவபிள்ளையே, அன்றைக்கு சகேயுவுக்குக் கிடைந்த கிருபை உனக்குக் கிடைத்திருக்கிறது.

இன்றைக்கு அந்த கிருபையின் அழைப்புக்கு ஆம் என்று சொல்லுவீர்களோ இல்லை என்று சொல்லுவீர்களோ அது உங்கள் கைகளில் இருக்கிறது. ஆனுல் நீங்கள் எடுக்கிற அந்த தீர்மானத்தில்தான் உங்களுடைய எதிர்காலம் இருக்கிறது. உங்களுடைய நித்தியம் அமைந்திருக்கிறது என்பதை மறந்துபோய் விடக்கூடாது.

2. தனிப்பட்ட அழைப்பு:-

சகேயுவுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு ஒரு தனிப்பட்ட அழைப்பாகும். தனிப்பட்ட அழைப்பு என்று ஏன்

சொல்லுகிறேன் தெரியுமா? அத்தனை திரளானக் கூட்டத்திற்கு மத்தியிலே கர்த்தர் சகேயுவினுடைய பெயரை அழைத்தார். ஆம், அது தனிப்பட்ட அழைப்பு.

சகேயுவே உன்னால் ஒளிந்திருக்க முடியாது. நீ அறியப்படாதவனாய் இனிமேலும் இருக்க முடியாது. நீ இலைகளுக்குள்ளே, பாரம்பரியங்களுக்குள்ளே, சாக்கு போக்குகளுக்குள்ளே மறைந்து கொண்டு ஜீவிக்க முடியாது. உன்னை நான் தனிப்பட்ட விதத்தில் ஆராய்ந்து அறிந்திருக்கிறேன்.

சகோதரனே, நீ ஒருவேளை இன்று தனிமையாய் உட்கார்ந்திருக்கலாம். ஒரு அனாதையைப் போல அமர்ந்திருக்கலாம். ஆனால் ஆண்டவருக்கு முன்பாக நீ அறியப்படாதவன் இல்லை. அவருடைய கண்களுக்கு முன்பாக மறைவானது ஒன்றும் இல்லை. இதோ அவருடைய கண்கள் உன்னை நோக்கிப் பார்க்கிறது.

நம் அருமை ஆண்டவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாவற்றையும் படைத்தவர்தான். உலகத்தில் உள்ள ஐநூறு கோடி மக்களையும் போஷித்து வழிநடத்தி வருகிறவர்தான். அதே நேரத்தில் அவர் உன்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். உன்னுடைய நினைவுகளையும் எண்ணங்களையும் தூரத்திலிருந்து அறிய வல்லமையுள்ளவர்.

நம் அருமை ஆண்டவர் பூமியில் இருந்த நாட்களில் திரளான மக்கள் மத்தியிலே பிரசங்கித்தார். படகின்மேல் நின்று பிரசங்கித்தார். அவர் எல்லா மக்களுக்கும் பொதுவான தேவன். அதே நேரத்தில் அவர் தனிப்பட்டவர்களுக்கும் கர்த்தராயிருக்கிறார்.

தனிப்பட்ட ஒரு மனுஷனாகிய நிக்கொதேமுவோடு கூட அமர்ந்திருந்து அவனுக்கென்று நேரம் செலவழித்து அவனுடைய இருதயத்தின் பாரங்களை எல்லாம் அகற்றி

ளர். அவனுடைய சிந்தனைகளின் கேள்விகளையெல்லாம நிவிர்த்தி செய்தார். ஆம் அவர் தனிப்பட்ட தேவன்.

அத்தனை பெரிய ஆண்டவர் ஒரு சமாரியா ஸ்திரீயை தேடி மத்தியான வெயில் என்றும் பாராமல் கிணற்றின் அருகே காத்திருந்து அவளை இரட்சிப்பிற்குள் நடத்தினர். அவளுடைய முழு வாழ்க்கையையும் திருப்பினர். அது போலவே பெதஸ்தா குளத்தண்டை முப்பத்தி எட்டு வருடமாய் அனுதையைப் போல கிடந்த திமிர்வாதக்காரனை நோக்கி சென்றார், மனதுருகி அவனை குணமாக்கினர். அவர் தனிப்பட்ட தேவன். ( **He is our personal God**)

அந்த அருமை ஆண்டவர்தான் சகேயுவை பெயர் சொல்லி அழைக்கிறதைப் பாருங்கள். சகேயுவே இறங்கி வா என்று எத்தனை அழகாக தனிப்பட்ட முறையில் அழைக்கிறார் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

தேவபிள்ளையே, இந்த கூட்டத்தின் மத்தியிலே இப்பொழுதே தேவனுடைய இரக்கம் உன்னை நோக்கி கடந்து வருகிறது. தேவனுடைய வல்லமை உன்னை நோக்கி கடந்து வருகிறது. தனிப்பட்ட உன் வாழ்க்கையிலுள்ள உன் கண்ணீரை அவர் காண்கிறார். மனுஷனால் உனக்கு உதவி செய்ய முடியாத இக்கட்டான நிலைமையை அறிகிறர். அவர் கரம் நீட்டி உன்னை தூக்கி எடுத்து அரவணைக்க விரும்புகிறார்.

மார்த்தாளே, மார்த்தாளே என்று உன் பெயர் சொல்லி அழைத்து 'மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் தேவையானது ஒன்றே" என்று சொல்லி தேற்றுகிறார். மரியாளே நீ நல்ல பங்கை தெரிந்து கொண்டாய் என்று கூறுகிறார். நாத்தான்வேலே உன்னை அத்தி மரத்தின் கீழேக் கண்டேன். நீ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று சொல்லுகிறார்.

நம் அருமை ஆண்டவர் ஆபிரகாமை பெயர் சொல்லி அழைத்தார். ஆபிரகாமே என்று கூப்பிட்டார், சாமுவேல் சிறுவன்தான். சாமுவேலே, சாமுவேலே என்று

கூப்பிட்டு தேவ இரகசியங்களை எல்லாம் சின்ன சாமுவே லோடுகூட அவர் பகிர்ந்து கொண்டார். ஆம் அவர் தனிப் பட்ட முறையில் நம்முடைய தேவன்.

வானத்தை அண்ணாந்துப் பாருங்கள். எத்தனை கோடி கோடி நட்சத்திரங்கள் வானத்தில் இருந்தாலும் ஒவ் வொரு நட்சத்திரத்தையும் அவர் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கிறார். அவற்றை எல்லாம் பெயர் சொல்லி அழைக்கிறார் என்று சொல்லுகிறது. ஏசாயா 40:26-ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள்

''உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்; அவை களைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல் லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது'' (ஏசாயா 40:26).

தேவபிள்ளையே, அந்த அருமை ஆண்டவரை உன் னுடைய சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டு தனிப் பட்ட முறையில் அவரோடு மனம் திறந்து பேசுவாயா? இன்று இரவு இயேசுவே உம்முடைய கரத்தில் என் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறேன். நீரே என்னை வழி நடத்தும் என்று அவருடைய கரத்தில் உன் ஜீவியத்தை விட்டு கொடுப்பாயா? அவர் உன்னை தேற்ற விரும்புகிறார். புதிய வாழ்க்கையைத் தர பிரியப்படுகிறார். உன்னுடைய தகப்பனாய், தாயாய் அரவணைத்து ஆசீர்வதித்து நடத்தி செல்ல பிரியப்படுகிறார்.

### 3. துரிதமான அழைப்பு:-

சகேயுவுக்குக்கொடுக்கப்பட்ட அழைப்பை பாருங்கள். அது கிருபையின் அழைப்பு. தனிப்பட்ட அழைப்பு. மாத் திரமல்ல, அது ஒரு துரிதமான அழைப்புங்கூட. அந்த வச னத்தை வாசித்துப பாருங்கள். ''நீ சீக்கிரமாய் இறங்கி வா'' இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்க வேண்டும்.

''சீக்கிரமாய், துரிதமாய்'' என்று கர்த்தர் அவசரப் படுத்துகிறார். மாத்திரமல்ல, இன்றைக்கு என்று அவர் நாளையும் குறிப்பிடுகிறார். ஆம் இது ஒரு துரிதமான அழைப்பு.

ஒருவேளை அவர் மரத்தின் அடியில் நின்று சகேயுவே மெதுவாய் இறங்கி வா; விழுந்து விடாதே நான் உனக்காய் காத்திருக்கிறேன் என்று அவர் சொல்லவில்லை, கர்த்தர் தமது அழைப்பிலும் ஒரு துரிதத்தை வைத்தார். அவசரத்தை இணைத்து சொல்லுகிறார். நீ சீக்கிரமாய் இறங்கி வா.

நாம் துரிதப்பட வேண்டிய நேரத்திலே நின்று கொண்டிருக்கிறோம். இது வருகையின் நேரம். அவசரப் பட வேண்டிய நேரம். என்றென்றைக்கும் நாம் பாதாளத்தில் சிக்கி விடாதபடிக்கு துரிதமாய் காரியங்களை செய்ய வேண்டிய நேரம். நித்திய நரகத்தின் ஜுவாலையிலிருந்து தப்ப நாம் துரிதமாய் முடிவு எடுக்க வேண்டிய நேரம்.

தேவபிள்ளையே, மனம் திரும்ப துரிதப்படு. இரட்சிப்பின் சுவிசேஷத்தை பெற துரிதப்படு. சீக்கிரமாய் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள். பரிசுத்தத்தை நோக்கி. பூரணத்தை நோக்கி துரிதமாய் முன்னேறி வா.

எடுக்க வேண்டிய தீர்மானத்தை இன்றே நீ எடுப்பாயாக! நாளைய தினம் நம்முடைய நாள் அல்ல. நாளையத் தினம் நமக்கு கிடைக்குமோ இல்லையோ நமக்கு தெரியாது. தேவபிள்ளையே, இரண்டு காரியங்கள் ஒரு மனுஷனை எப்போதும் எதிர்நோக்கி நின்றுகொண்டிருக்கிறது. எது அவனை முதலில் சந்திக்கும் என்று அவனுக்கு தெரியாது. அது என்ன தெரியுமா? ஒன்று ஒரு மனுஷனுடைய மரணம் இரண்டு கர்த்தருடைய வருகை. இரண்டும் நினையாத நாழிகையிலே இருக்கும். ஆகவே நாம் துரிதப்பட வேண்டியது அவசியம்.

அருமையான தேவபிள்ளையே, இன்றைக்கு இந்த உலகத்திற்கு வெடி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தைப்போல நாற்பதாயிரம் உலகங்களை அழிக்கும்படிக்கு விஞ்ஞானிகள் ஏற்கெனவே அணு ஆயுதங்களை ஆயத்தப் படுத்தி விட்டார்கள். இனி காலம் செல்லாது. முடிவு நேரத்திற்கு வந்து விட்டோம். கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்பட வேண்டிய ஒரு நேரத்திற்குள் நின்று கொண்டிருக்கிறோம்.

அன்றைக்கு சோதோம் கெமோராவுக்கு அழிவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தேவதூதர்கள் சோதோமின் அழிவைக் குறித்து லோத்துவிடம் பேசினார்கள். சோதோம் அழிக்கப்படபோகிற நேரம் நெருங்கி கொண்டிருக்கிறது என்று சொல்லி தூதர்கள் லோத்துவை துரிதப்படுத்திப் பார்த்தார்கள். ஆனால் லோத்துவின் குடும்பம் எளிதாக சோதாமைவிட்டு வெளியே வருவதாக தெரியவில்லை.

முடிவிலே அந்த தூதர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? லோத்துவின் கையையும் அவனுடைய வீட்டாரின் கையையும் பிடித்து தரதர என்று இழுத்து சோதோமுக்கு வெழியே கொண்டு விட்டார்கள்.

கர்த்தர் அவர்களைப் பார்த்து சொன்னது என்ன தெரியுமா? நீ உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே. நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார் (ஆதி 19:17).

தேவபிள்ளையே, உலகம் பெரிய அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. காணப்படுகிற இந்த உலகமானது அக்கினி ஜுவாலைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சபூதங்களும் வெந்து உருகிப்போகும் என்று உலகம் எச்சரிக்கிறது. உலகத்திற்கு இனி நம்பிக்கை இல்லை. உலகத்தைச் சார்ந்து ஜீவிக்க உலகத்திற்கு எந்த மேன்மையும் இல்லை. இந்த கடைசி நிமிட நேரத்தில் கர்த்தர் உனக்கு ஒரு கடைசி தருணத்தைக் கொடுக்கிறார். கடைசி

அழைப்பைக் கொடுக்கிறார். இன்றைக்கு நீ சீக்கிரமாய் இறங்கி வா நான் உன் வீட்டில் தங்க வேண்டுமென்று அவர் கேட்கிறார். இறங்கி வருவாயா?

இப்பொழுதே அனுக்கிரகக் காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் இந்த தருணத்தை பயன்படுத்திக் கொள்ளுவாயா?

ஒருமுறை மூடி பக்தன் ஒரு பெரிய மேடையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவருடைய பிரசங்க வாக்கியம் இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்பதாக இருந்தது. கூட்டத்தின் முடிவிலே இரட்சிப்புக்காக அவர் அழைப்புக் கொடுத்தார்.

அந்த வேளை ஒரு பெரிய செல்வந்தன் தன்னை ஒப்புக் கொடுத்து கண்ணீரோடு முன் வந்தார். ஐயா, நான் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய பிரசங்கம் என் இருதயத்தைத் தொட்டது. இரட்சிப்பின் அவசியத்தைக் குறித்து நீங்கள் தெளிவாய் கூறிவிட்டீர்கள். ஆனாலும் என்று சொல்லி இழுத்தார்

மூடி பக்தன் துக்கத்தோடு அந்த செல்வந்தரைப் பார்த்து, ''ஏன் நீங்கள் ''ஆனாலும்'' என்று இழுக்கிறீர்கள். இன்றைக்கு இயேசு உங்களுடைய் இருதயத்திலும் வாழ்க்கையிலும் வருவதற்கு ஒப்புக்கொடுங்கள்'' என்று சொன்னார்.

அதற்கு அந்த செல்வந்தன், ''ஐயா, என்னுடைய வியாபாரத்திலே ஒருவர் பங்காளியாக இருக்கிறார். ஆகவே பல கள்ள கணக்கு எழுத வேண்டியதாயிற்று. அவைகளை எல்லாம் நான் சரி செய்துவிட்டு துரிதமாக இயேசுவண்டை வந்து விடுகிறேன். எனக்கு சில நாட்களை கொடுங்கள்'' என்றார்.

அந்த செல்வந்தன் தன் இருதயத்தை ஆண்டவருக்கு கொடுக்கவும் இல்லை. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

இரண்டு ஆண்டுகள் சென்றது. மூடிபக்தன் அதே இடத்திற்கு ஊழியத்திற்கு வந்தபோது அங்கே உள்ளவர்கள் அவரிடம் அந்த செல்வந்தன் வியாதிப்பட்டு மரணத் தருவாயில் இருக்கிறதாகவும், மூடிபக்தன் சென்று ஜெபிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

மூடி பக்தன் செல்வந்தன் வீட்டிற்குப் போகப் புறப்பட்டார். ஆனால் ஆண்டவரோ அதைத் தடுத்து நீ அவனுக்காக ஜெபிக்க போக வேண்டாம். நான் அவனுக்கு எத்தனையோ கிருபையின் தருணங்களை கொடுத்து விட்டேன். எத்தனையோ ஊழியக்காரர்களை அனுப்பினேன். ஆனால் அவன் கிருபையின் தருணத்தை புறக்கணித்து விட்டான் எனக்கு அவன் இருதயத்தை அடைத்துக்கொண்டு பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தான். இந்த மரணத் தருவாயில் அவன் என்னை தேடுகிறான். நான் அவனை புறக்கணித்தேன். கிருபையின் வாசல்கள் அவனுக்கு அடைக்கப்பட்டு விட்டன. நீ அவனுக்காக சென்று ஜெபிக்க வேண்டாம் என்று சொல்லி விட்டார்.

எனினும் மூடி பக்தன் அவனுடைய வீட்டிற்கு சென்று ஜெபிக்கும்படி போனார். ஆனால் அது அவனுடைய கடைசி நேரமாய் இருந்தது. உயிர் பிரிகிற நேரத்தில் அந்த செல்வந்தன் அவரைப் பார்த்து எரேமியா 8-ம் அதிகாரம் 20-ம் வசனத்தில் உள்ள பாகத்தை சொன்னான்: ''அறுப்புக்காலம் சென்றது. கோடைக்காலமும் முடிந்தது. நானோ இரட்சிக்கப்படவில்லை'' என்று சொல்லி மரித்தான். எத்தனை பரிதாபமான முடிவு பாருங்கள்.

வேதத்தில் இன்னொரு மனுஷனைக் குறித்தும் வாசிக்கிறோம். அவன் ஒரு பெரிய ஐசுவரியவான்தான். பூமியிலே அவனுக்குக் கிடைத்த கிருபையின் தருணத்தை எல்லாம் இழந்துவிட்டான். நரக கடலிலே, அக்கினி ஜுவாலையிலே அவன் தவிக்கும்போது கண்களை வானத்திற்கு நேராக

அண்ணாந்துப் பார்த்தான். அங்கே ஆபிரகாமைக் கண்டான். ஆபிரகாமைப் பார்த்து, ''தகப்பனே'' என்று அழைத்தான். ஆனால் ஆபிரகாமோ அவனை ''மகனே'' என்று அழைக்கவில்லை. எத்தனை பரிதாபம் பாருங்கள்.

பூமியிலே வாழும்போது ஆபிரகாமுக்கு அவன் குமாரனாய் வாழ்ந்திருப்பான் என்றால் ஆபிரகாமின் மடியிலே சேர்க்கப்பட்டிருந்திருப்பான். ஆபிரகாமின் மகனாகும்படிக்கு அவனுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தும் அவன் அதை ஏற்றுக்கொள்ளாததினால் ஆபிரகாம் அவனை மகனே என்று அழைக்கவில்லை. அவனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது!

தேவபிள்ளையே, கிருபையின் தருணத்தை புறக்கணித்துவிடாதே. கர்த்தருடைய அழைப்பு துரிதமாய் உன்னை நோக்கி வருகிறது. நீ சீக்கிரமாக இறங்கி வா என்று கர்த்தர் உன்னை அழைக்கிறார். இரட்சிக்கப்பட துரிதப்படு. கல்வாரியண்டை ஓடி வர துரிதப்படு. அவருடைய இரத்தத்தினால் பாவங்களற சழுவப்பட துரிதப்படு. கிருபையின் வாசல்கள் அடைபடுவதற்கு முன்பாக கிடைத்திருக்கிற இந்த கடைசி தருணத்தை பயன்படுத்திக்கொள்.

**4 தாழ்மைக்கு ஒரு அழைப்பு:-**

சகேயுவே இறங்கி வா என்று ஆண்டவர் அழைக்கிற அந்த அழைப்பைப் பாருங்கள். இது தாழ்மைக்குக் கொடுக்கப்படும் ஒரு அழைப்பாகும். ''இறங்கி வா'' என்று கர்த்தர் அழைக்கிறார்.

சிலர் தங்களுடைய குலம், கோத்திரம், ஜாதி. பெருமைகளையெல்லாம் பேசிக்கொண்டு இறங்கி வருவதில்லை. வரட்டு கௌரவங்களை பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். குலத்தின் பெருமைகளை பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். எங்களுடைய பூர்வீகம் என்ன தெரியுமா? எங்களுடைய முற்பிதாக்கள் எல்லாம் யார் தெரியுமா? என்று சொல்லி இருதயத்தை கடினப்படுத்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய பெருமையை விட்டு இறங்காததி-

ளுல் அவர்கள் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடிய வில்லை.

சகேயுவே, நீ இறங்கி வா என்று ஆண்டவர் அழைக்கிறார். சகேயு சமுதாயத்தில் பெரிய மனிதனும் இருந்திருக்கக்கூடும். ஆயக்காரரின் தலைவனும் இருந்திருக்கக்கூடும். ஆனால் அது அவனுக்கு இரட்சிப்பைக் கொடுக்கபோவதே இல்லை ஒரு மனுஷனுடைய சன்மார்க்கமோ, தான தர்மங்களோ அவனுக்கு இரட்சிப்பைக் கொடுப்பதில்லை. ஒருவன் எவ்வளவு நல்லவனுயிருந்தாலும் அவனுடைய நல்ல சுபாவங்கள் இரட்சிப்பைக்கொண்டு வரப்போவதே யில்லை.

ஆனுல் எந்த ஒரு மனுஷன் தன்னைத் தாழ்த்தி ஆண்டவரே நான் ஒரு பாவி உமக்கு முன்பாக நிற்க நான் தகுதியுள்ளவன் அல்ல. இதோ, என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன் என்று தன்னை ஒப்புக்கொடுக்கிறுனே அவனே கர்த்தருடைய கண்களில் தயவையும், இரட்சிப்பையும் பெறுவான். தேவபிள்ளையே, நீ உன்னை தேவ சமுகத்தில் தாழ்த்துவாயா? ''இறங்கி வா'' என்று கர்த்தர் அன்போடு அழைக்கிறுர்.

உன்னை இறங்கி வா என்று சொல்லுகிறவர் உனக்காக பரலோகத்தை விட்டு இறங்கி வந்தவர் என்பதை மறந்துபோகாதே. தேவகுமாரனுய் இருந்த அவர் இறங்கி உனக்காக மனுஷகுமாரனுய் வந்தார். பிதாவின் மடியில் செல்லப்பிள்ளையாய் இருந்த அவர் தம்மைத்தாமே தாழ்த்தி அடிமையின் ரூபம் எடுத்தார். ஆயிரம் பதினுயிரம் தேவதூதர்களால் போற்றப்படுகிறவர் அவர் அழகும் இல்லாமல், சௌந்தரியமும் இல்லாமல் சிலுவையில் அறையப்பட தன்னை ஒப்புக்கொடுத்தார். உன்னை மீட்பதற்காக அவர் எவ்வளவாய் இறங்கி வந்தார் என்பதை சிந்தித்துப்பார்! அந்த தேவனுக்காக நீ இறங்கி வர கடமைப்பட்டிருக்கிறுய் அல்லவா? அவருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்த ஒருபோதும் வெட்கப்படாதே!

உன் சன்மார்க்கத்தையும், உன் நற்குணங்களையும் பேசிக்கொண்டிராதே. அவைகள் உனக்கு இரட்சிப்பை கொடுப்பதில்லை நீ கீழே இறங்கி உன்னைத் தாழ்த்து. ஆண்டவரே நான் ஒரு பாவி என் மேல் கிருபையாயிரும் என்று சொல்லி மன்றாடு.

இயேசு பரிசேயனையும், ஆயக்காரனையும் பற்றி உவமை ஒன்றை வேதத்தில் சொன்னார். பரிசேயனுக்கு தன்னைத் தாழ்த்த மனமில்லை அவன் தன்னுடைய மேன்மைகளை எல்லாம் கர்த்தருக்கு முன்பாக வர்ணித்தான். நான் தசமபாகம் கொடுக்கிறேன். வாரத்தில் இரண்டு முறை உபவாசிக்கிறேன் என்றெல்லாம் சொல்லி தன்னை நீதிமானாக காண்பிக்க முயன்றான்.

ஆனால் ஆயக்காரனைப் பாருங்கள். அவன் தேவாலயத்திற்கு முன்பாக நின்று தன்னுடைய கண்களைக்கூட வானத்திற்கு ஏறெடுக்க துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று கதறினான்.

ஆம் அவன் அவ்வளவாய் இறங்கி தன்னைத் தாழ்த்தினதினாலே கர்த்தர் அந்த ஆயக்காரனை நீதிமானாக்கினார். தேவபிள்ளையே, நீ நீதிமானாக்கப்பட வேண்டுமா? இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமா? நீ இறங்கி வா என்று கர்த்தர் அழைக்கிறார்.

## 5. நிரந்தரமான அழைப்பு:-

ஆண்டவர் அன்போடுகூட சகேயுவைப் பார்த்து சொல்லுகிறார் நான் உன் வீட்டில் தங்கவேண்டும். வந்துவிட்டு போகவேண்டும் என்று அல்ல; நிரந்தரமாய் தங்க வேண்டும். ஆம், இந்த அழைப்பு ஒரு நிரந்தரமான அழைப்பு.

இயேசு அந்த வீட்டிற்கு வரும் முன்பதாக அந்த வீடு எப்படி இருந்திருக்கும் என்று நான் எண்ணிப்பார்க்

கிறேன். அவன் ஒரு ஆயக்காரனுக்கு பெரிய தலைவனாய் இருந்ததினால் பெரிய பெரிய ரோமை அதிகாரிகள் அவன் வீட்டில் வந்து தங்கியிருக்கவேண்டும். அவர்களை பிரியப்படுத்த அவன் குடி வகைகளையும், கூத்து வகைகளையும் ஒழுங்கு செய்திருந்திருப்பான் அவர்கள் குடித்து கும்மாளமிட்டு விருந்தை புசித்து பாவ சந்தோஷங்களை அனுபவித்திருந்திருப்பார்கள். அந்த வீடு விபச்சாரர்களுக்கும், வேசிகள்ளர்களுக்கும் திறந்த வீடாய் இருந்திருக்கும். காரிருள் அந்த வீட்டை பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும். சாத்தானும் அவனுடைய சேனையும் அவனுடைய வீட்டில் மகிழ்ச்சியாய் தங்கி இருந்திருப்பார்கள்.

ஆனால இன்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன் வீட்டில் தங்கவேண்டும். என் பிரசன்னம் உன் வீட்டை நிரப்பவேண்டும். என் சமுகம் உன்னை தேற்றவேண்டும். என்னோடு பரிசுத்த தேவதூதர்கள் உன் வீட்டில் வந்து வாசம் செய்யவேண்டும்.

இயேசு அந்த வீட்டில் தங்க வரும்போது என்ன நேரிடும்? வேதம் சொல்லுகிறது நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் வெளிச்சமாகிய கிறிஸ்து வரும்போது இருளின் ஆதிக்கங்கள் எல்லாம் விலகிப்போகும். பரிசுத்தம் வரும்போது பாவ சந்தோஷம் ஓடிப்போய்விடும்.

குணமளிக்கிற கர்த்தரின் வல்லமை வரும்போது வியாதிகள் ஓடி மறைந்துபோகும். சமாதானத்தைத் தருகிற இரட்சகர் வரும்போது குழப்பங்களும் கவலைகளும் நீக்கிப்போகும்; ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் எல்லாம் புதிதாயின. பழையவைகள் ஒழிந்துபோயின என்று வேதம் சொல்லுகிறது

ஒருமுறை ஒரு தாய் தன் மகனை கல்லூரியில் படிக்க பட்டணத்திற்கு அனுப்பி வைத்தாள். அவன் நன்றாய் படிப்பான் என்று அவள் எண்ணினாள். அவனைப் பார்த்து வரும்படி அவனுடைய ஆஸ்டலுக்கு அவள் சென்ற

போது தன்னுடைய மகனுடைய அறையைப் பார்த்து திடுக்கிட்டாள்.

காரணம் அந்த அறை முழுவதும் சினிமா நடிகைகளின் போட்டோக்களும், நிர்வாண படங்களும் நிறைய ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. மகனுடைய மனநிலையை அறிந்துகொண்டாள் அவள். தாயின் உள்ளம் புண்பட்டது எனினும் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஊருக்குப் போய் தன்னுடைய பெரிய போட்டோ ஒன்றை மகனுக்கு அனுப்பி ''மகனே எனது இந்த போட்டோவையும் உன் அறையிலே மாட்டி வை'' என்று எழுதினாள். தாய் போட்டோவை சுவரில் மாட்டும்படி அவன் கைகளிலே எடுத்தான். ஆனால் நிர்வாண படங்களோடுகூட தாயின் படத்தை ஒன்றாய் வைப்பது எப்படி? தாயின் அன்புக்கு ஒன்றுமே ஈடாகாதே! ஆகவே தாயின் படத்தை மாட்டுவதற்கு முன்பு மற்ற எல்லா ஆபாச படங்களையும் கழற்றினான். கிழித்து எறிந்தான். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

இயேசு உங்கள் வீட்டிற்கு வரும்போது சாத்தானுடைய வல்லமைகள், பிசாசின் போராட்டங்கள் எல்லாம் விலகி போகும். எல்லா மந்திர கட்டுகளும் தெறிப்புண்டு போய்விடும்.

தன் உள்ளத்தை கர்த்தர் தங்குவதற்கு இடம் கொடுத்த தாவீது மகிழ்ச்சியோடு சொல்லுகிறார். என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். இயேசு உங்களுடைய வீட்டிற்கு வருவதற்கு இடம் கொடுப்பீர்களா? உங்கள் உள்ளத்தில் தேவனுடைய பிரகாசம் வீசும்படி, இயேசுவே என் உள்ளத்தில் வாரும் என்று அழைப்பீர்களா?

ஒரு முறை ஒரு ராஜாவைப் பார்ப்பதற்கு மூன்று பேர் வந்திருந்தார்கள். முதலாவது வந்தவன் ராஜாவை

வணங்கி என் மகளுக்கு திருமணக் காரியம் ஒழுங்காகி இருக்கிறது. ஆனால் திருமணத்தை நடத்துவதற்கு எனக்கு எந்த பண வசதியும் இல்லை. ராஜாவே என் மேல் மனதி ரங்கி நீர் எனக்கு உதவி செய்ய வேண்டும். பத்தாயிரம் ரூபாய் எனக்கு கொடுத்தால் போதும் அருமையாய் திருமணத்தை நடத்தி முடித்து விடுவேன் என்றான் பணிவோடு.

ராஜா மனதிரங்கினர். மந்திரியைப் பார்த்து அவன் கேட்டபடியே அந்த பணத்தை கொடுத்து அனுப்பு என்று சொல்லி வாழ்த்தி அனுப்பினர்.

இரண்டாவது ஆள் ராஜாவிடம் வந்தான். ராஜாவே நான் கிராமப்புறத்து ஏழை. எனக்கு சொந்தமான நிலம் ஒன்றுமில்லை. வறுமையில் வாடுகிறேன். எனக்கு ஐந்து ஏக்கர் நெல் விளையக்கூடிய நஞ்சை நிலம் கொடுப்பீர் என்றால் அதை வைத்து என் குடும்பத்தை நடத்தி விடுவேன். எனக்கு உதவிசெய்யும் என்று மன்றாடினான். ராஜா மனதிரங்கி ஐந்து ஏக்கர் நிலத்தை அவனுக்குக் கட்டளையிட்டார்.

மூன்றாவது ஆள் உள்ளே வந்தான். ராஜா அவனைப் பார்த்து, 'நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? உன்னுடைய தேவை என்ன சொல் அதை நிறைவேற்றுகிறேன்'' என்றார்.

அதற்கு அவன் தலைவணங்கி, ''ராஜாவே, எனக்கு. ஒரே ஒரு வாஞ்சை உண்டு பல ஆண்டுகளாக அதையே எண்ணி ஏங்குகிறேன் ராஜாவே நீர் என் வீட்டில் வந்து தங்க வேண்டும்'' என்று வருந்தி கேட்டான் அந்த ராஜாவின் உள்ளம் அகமகிழ்ந்தது. மகிழ்ச்சியுடன் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

அவ்வளவுதான் அந்த மனுஷனுடைய நிலை அன்றே மாறினது. ராஜா வந்து அவன் வீட்டில் தங்க வேண்டுமென்பதால் அவனுக்கு மிகப்பெரிய அழகிய வீடு கட்டப்

பட்டது. அவனுடைய கிராமத்திற்கு புதிய பாதைகள் போடப்பட்டது. வழி நெடுக பூங்கா அமைக்கப்பட்டது. அந்த சின்ன கிராமம் குட்டி பரலோகம் போல காட்சி அளித்தது ராஜா வருகிறார் என்கிற மகிழ்ச்சியினால் அந்த கிராம மக்கள் எல்லாம் பூரிப்பு அடைந்தார்கள். ராஜா அவனுடைய வீட்டில் வந்து தங்கியபோது அவனுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

தேவபிள்ளையே, இந்தக் கூட்டத்திலே நீ பல தேவைகளோடு வந்து இருக்கலாம். என் பிள்ளைக்கு திருமணமாக வேண்டுமே என்ற கலக்கத்தோடு வந்திருக்கலாம். கர்த்தர் அதை நிறைவேற்றுவார். கடன் பிரச்சனைகளோடு வந்திருக்கலாம், கர்த்தர் அதை மாற்றுவார். துயரத்தோடும், கலக்கத்தோடும் வந்திருக்கலாம். கர்த்தர் உன் கண்ணீரைத் துடைப்பார்.

ஆனால் நீ இன்றைக்கு கர்த்தரிடத்தில் விரும்பிக் கேட்கிற காரியம் என்ன? வெறும் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் தானா? அல்லது கிறிஸ்து உள்ளத்தில் வந்து தங்க வேண்டும் என்ற வாஞ்சையா?

இயேசுவே என் உள்ளத்தில் வாரும் என்னோடு தங்கியிரும் என்று இப்பொழுது அவரை அழைப்பாயா? அவர் உன் வாசல் கதவை தட்டிக் கொண்டிருக்கிறார். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் அவனிடத்தில் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் என்று அன்போடு அழைக்கிறார்.

தேவபிள்ளையே, உன் தேவை எதுவாயிருந்தாலும் அவைகளை இயேசு சந்திக்க வல்லமையுள்ளவர். ஆனால் முதலாவது நீ அவரை நேசித்து இயேசு ராஜா என் உள்ளத்தில் வாரும் என்று கூப்பிடுவாயா? ஒரு மனுஷனுடைய தேவைகளிலே மிகப்பெரிய தேவை இயேசுதான். முதலாவது அவரை தேடுவீர்களானால் மற்றவைகள் எல்லாம் உங்களுக்குகூட கொடுக்கப்படும்.

சகேயு இயேசுவை வீட்டிற்கு அழைத்தான். இரட்சிப்பு அவனுக்கு மாத்திரமல்ல அவனுடைய முழு குடும்பத்திற்கும் வந்தது. இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாய் இருக்கிறானே என்று இயேசு மகிழ்ச்சியோடு சொன்னார்.

தேவபிள்ளையே, நீ நித்தியத்தில் நட்சத்திரத்தைப் போல பிரகாசிக்க வேண்டும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தி இருக்க வேண்டும். நித்தியமான ஆசீர்வாதங்களை பெற்று கிறிஸ்துவோடுகூட உன்னதங்களிலே நீ பிரகாசிக்க வேண்டும். இன்று முதல் நீ ஆபிரகாமின் குமாரனாய், குமாரத்தியாய் இருக்கிறாய். கர்த்தருடைய பிள்ளை என்று அழைக்கப்படுகிற பாக்கியத்தை உனக்குத் தருகிறார். இயேசு தங்க உன் உள்ளத்தில் இடம் கொடுப்பாயா? இதோ மனுஷர் மத்தியிலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது.

என் உள்ளத்தை இயேசுவுக்கு கொடுக்க பிரியப்படுகிறேன், என் வாழ்க்கையில் இயேசுவை அன்போடு அழைக்கிறேன். அவரை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறவர்கள் உங்களுடைய கைகளை உயர்த்தி இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள். நான் உங்களுக்காக ஜெபிக்க விரும்புகிறேன்.

இன்று உங்களுடைய வாழ்க்கையில் பெரிய மகிமையான மாறுதல்கள் ஏற்படப்போகிறது. இனி நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தருடைய சுதந்தரவாளிகள். கர்த்தர் மனதுருகி உங்கள் அருகில் வந்து உங்களை அரவணைக்கிறதை உணருகிறேன். இதோ இயேசுவின் அன்பின் கரம் உங்களை ஆசீர்வதிக்கிறது. நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அல்லேலூயா!

# ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 235 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

**சாம் ஜெபத்துரை, M. A.**

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.



., Devaraj Pitchaimoni, M.Sc., M.Phil.,
Municipal Women Children
Hospital Quarters
Tirunelveli - 627 006,
Tamil Nadu